[1974 மார்ச் 23

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுபற்றிய விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: இந்த ஊராட்சி ஒன்றியப் பணியாளர் புரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் கின்றன? எவ்வளவு வீடுகள் கட்டலாம் என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது? அது எவ்வளவு காலத்திற்குள் பூர்த்தியாக முடிவு செய்யப்பட இருக்கிறது? இம்மாதிரி ஊராட்சி மன்றங்களில் வீடுகள் கட்டுவதற்கு எந்த அடிப்படையில் முன்னுரிமை அளிக்க விதிமுறைகள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மொத்தம் தமிழ் நாட்டில் 374 ஒன்றியங்கள் இருக்கின்றன. இன்னும் 180 ஒன்றியங்களுக்கு அலுவலர் குடியிருப்பு கட்ட வேண்டி இருக்கிறது. இது படிப்படியாக ஒரு ஃபேஸ்டு ப்ரோக்கிராம் கீழ் கட்டப்படுகிறது. இந்த வருடம்கூட ஸ்ரீவைகுண்டம், புதூர், விளாத்திகுளம் போன்ற இடங்களில் குடியிருப்புகள் கட்டுவது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்காகக் கட்டப்படும் வீடுகளுக்கு மாதம் எவ்வளவு ரூபாய் வாடகையாக வசூல் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அது கொடுக்கப்படுகிற இடங்களைப் பொறுத்தது. மாவட்டத் தலைநகரிலேயே இருக்கிற வீடுகளாக இருந்தால் ஒரு விகிதம்—கிராமங்களில் இருந்தால் ஒரு விகிதம் என்ற அடிப்படையில்தான் வசூலிக்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தர மத்திய அரசாங்கம் மானியம் கொடுக்கிறதா? அந்த மானியத்தை எந்த அளவுக்கு இந்த அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதைப்பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.